Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாதி 24 | [10-10-1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 234

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிறிலங்கா இராணுவத்தினரின் அட்டூழியங்களை சித்திரிக்கும் ஓவியம்

சிறிலங்கா இராணுவத்தினரின் அட்டூழியங்களையும் அதற்கெதிராக போராடி வெற்றி பெறவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் பெரிய அளவிலான வர்ண ஓவியங்கள் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தின் முன்பாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கோண்டாவிலில் அமைந்துள்ள இப் பணியகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள இவ் ஓவியங்களை பெருமளவு மக்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ் ஓவியங்களுடன் போராட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் சுலோகங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவு இரண்டு விதமான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன இப் பிரசுரங்கள் வீதிகளிலும், வாகனங்களிலும் சுவரொட்டி (4ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம் எதிர்பார்த்தது ஒன்று; கிளாலியில் நிகழ்ந்தது வேறொன்று!

### இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

### புக்காராநோட்டம்

ஏழாலை, சட்டுவன் பகுதிகளை புக்காரா குண்டுவீச்சு விமானமொன்று நேற்றுக் காலை10.30மணியளவில் பல தடவைவட்டமிட்டுச்சென்றது

## சுழிபுரத்தில் ஒருவர் பலி; மீனவர் மீது தாக்குதல் உபகரணங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினர் நேற்று அதிகாலை 6மணியளவில் சுழிபுரம் சவுக்கடி கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுமார் 10 இற்கும் மேற்பட்ட மீனவர்களின் கட்டுமரங்களை நோக்கி அகோர பீரங்கி மற்றும் 50 கலிபர்த்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதில் ஒரு மீனவர் பலியானார்.

கடற்படைக் கப்பல் ஒன்றிலும் இரண்டு பீரங்கிப் படகுகளிலும்வந்தகடற்படையினர் சுமார் 300 யார் தொலைவில் வைத்து மீனவர்கள் மீது தாக்குதல்களை சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடைவிடாது மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலினால் சண்முகம் பத்மநாதன் (வயது 16 சுழிபுரம் மேற்கு) எனும் இளைஞர் 50 கலிபர் ரவை இடுப்பில் துளைத்து படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார். மேலும் 8 மீனவர்கள் தமது கட்டுமரம், வலை மற்றும் மீன்பிடி உபகரணங்களை கைவிட்டு கரை வந்து சேர்ந்தனர்.

பின்னர் 7.00 மணியளவில் காரைநகர் இராணுவ முகாமில் இருந்து கரைவந்து சேர்ந்த மீனவர்கள் மீது ஷெல் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் சுழிபுரம் சவுக்கடி கடற்கரைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

எனினும் அவ்விடத்தில் பதுங்குகுழி ஒன்று இருந்ததால் மீனவர்கள் உயிர் தப்பித்துக் கொண்டனர் என தெரிவிக்கப்பட்டது. (பா),(41)

## 300யார் தூரத்தில் நின்று கலிபர் தாக்குதல் நடத்தினர்

### தப்பிவந்த மீனவர் தகவல்

(நமது நிருபர்)

சுமார் 300யார் தூரத்தில் வைத்து எம்மை நோக்கி ஒரு கடற்படைக் கப்பலில் இருந்தும் இரண்டு பீரங்கிப் படகுகளில் இருந்தும் கடற்படையினர் பீரங்கியாலும் 50 கலிபராலும் வேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தனர்.

இவ்வாறு நேற்று அதிகாலை 6. 00 மணியளவில் சுழிபுரம் சவுக்கடி கடற்பரப்பில்வைத்து மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் நீந்தி கரைவந்து சேர்ந்த மா. சிவநேசன் என்கின்ற மீனவர் எமது செய்தியாளருக்கு விபரித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்; நானும் எனது சகாக்களும் சுமார் 10இற்கும் மேற்பட்ட கட்டுமரங்களில் காலை

## திருமலையில் புலிகள் தாக்கு

## யாழ்தேவி தோல்வி குறித்து ஐவன்

[கொழும்பு]

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை எதிர்பார்த்ததிற்குமாறான விளைவுகளையே அரசிற்கும், இராணுவத்திற்கும் கொடுத்துள்ளதாக "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். பிரசார நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கை மண் கௌவியதாகவும், புலிகளை பலவீனப்படுத்தவென தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கை எதிர்மறையாக இராணுவத்தரப்பிற்கே பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவ் இராணுவ நடவடிக்கையானது இராணுவத்தினரையே மேலும் பலவீனமாக்கியுள்ளது. இந் நடவடிக்கையை ஆரம்பித்தபோது இராணுவத்தளபதிகள் சாவகச்சேரியைப் பிடிப்பதே தமது நோக்கம் என்றார்கள். பின்னர் கிளாலியே தமது இலக்கு என்றார்கள். பின்னர் புலிகளை பலவீனப்படுத்துவதே தமது நோக்கம் என்றார்கள். ஆனால் விளைவு தலைகீழாக உள்ளது.

இதுவரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் 'யாழ்தேவி' நடவடிக்கையின் போதே மிகக்கூடிய இழப்பு இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் தனது பிரசாரத்திற்காக மேற்கொள்ளத் திட்டமிட்ட இந் நடவடிக்கை படுதோல்வி அடைந்தது. அத்துடன் அடுத்த ஜூன் மாதத்திற்கு வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இது இருந்தது.

வீடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த இரண்டு படகுத்துறைகளை அழிப்பதும், படகுகளை நாசம் செய்வதும் தங்களது நோக்கமாக இருந்தது என இப்பொழுது இராணுவத் தரப்பினர் கூறுகின்றனர் ஆனால் அப் பகுதியில் இருந்த பல நூற்றுக் கணக்கான படகுகளை புலிகள் அப்புறப்படுத்திவிட்டனர். எஞ்சிய உடைந்த படகுகளையே இவர்கள்எரித்தனர்.

எனவே இரண்டு படகுத் துறைகளை அழிப்பதற்கு இவ்வளவு இழப்புகளும், உயிர்ப் பலிகளும் அவசியமில்லை. விமானப்படை மட்டும் இவற்றை அழித்திருக்க முடியும் என்றார்.

## மாகாண முதலமைச்சராக பிரேமச்சந்திரா பதவியேற்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் புதிய முதலமைச்சராக

கப்பட்டதை ஆட்சேபித்து இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நேற்று முன் தினம்

## 'றுகுணு' கப்பலிலிருந்து உரம் இறக்குதல் ஆரம்பம்

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் கடற்படையினரின் சோதனையை முடித்துக்கொண்ட 'றுகுணு' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தது இக் கப்பலில் இருந்து உரம் இறக்கும் வேலைகள்

லில் கொழும்பு மற்றும் வெளியூர்களுக்கான 81 தபால் பொதிகளை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

கொழும்பில் இருந்து புறப்படும் 'வாதுவ' கப்பல் 4 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களுடன் எதிர்வரும்12 ம் திகதி

வின் கட்டுமரங்களை நோக்கி அகோர பீரங்கி மற்றும் 50 கலிபர்த்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதில் ஒரு மீனவர் பலியானார்.

கடற்படைக் கப்பல் ஒன்றிலும் இரண்டு பீரங்கிப் படகுகளிலும்வந்தகடற்படையினர் சுமார் 300 யார் தொலைவில் வைத்து மீனவர்கள் மீது தாக்குதல்களை சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடைவிடாது மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலினால் சண்முகம் பத்மநாதன் (வயது 16 சுழிபுரம் மேற்கு) எனும் இளைஞர் 50 கலிபர் ரவை இடுப்பில் துளைத்து படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு

மில் இருந்து கரைவந்து சேர்ந்த மீனவர்கள் மீது ஷெல்

கொண்டனர் என தெரிவிக்கப்பட்டது. (பா),(41)

# 300யார் தூரத்தில் நின்று கலிபர் தாக்குதல் நடத்தினர்

## தப்பிவந்த மீனவர் தகவல்

(நமது நிருபர்)

சுமார் 300யார் தூரத்தில் வைத்து எம்மை நோக்கி ஒரு கடற்படைக் கப்பலில் இருந்தும் இரண்டு பீரங்கிப் படகுகளில் இருந்தும் கடற்படையினர் பீரங்கியாலும் 50 கலிபராலும் வேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தனர்.

இவ்வாறு நேற்று அதிகாலை 6.00 மணியளவில் சுழிபுரம் சவுக்கடி கடற்பரப்பில்வைத்து மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் நீந்தி கரைவந்து சேர்ந்த மா. சிவநேசன் என்கின்ற மீனவர் எமது செய்தியாளருக்கு விபரித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்; நானும் எனது சகாக்களும் சுமார் 10இற்கும் மேற்பட்ட கட்டுமரங்களில் காலை 6 மணிக்கு மீன்பிடிக்கச்சென்றோம். சிறிது தூரம் சென்றதும் கடலின் தொலைவில் சிறிய கறுப்பு உருவங்கள் தென்பட்டன. கண்ணிமைக்கும் பொழுதில் ஒரு பெரிய கடற்படைக் கப்பலும் இரண்டு பீரங்கிப் படகுகளும் எம்மை சுமார் 300யார் தொலைவில் வந்தடைந்தன. மறுகணம் பீரங்கி, 50கலிபர் தாக்குதல் எம்மை நோக்கி இடைவிடாது மேற்கொள்ளப்பட்டவண்ணமிருந்தன.

எமது கட்டுமரத்திற்கு அப்பால் வந்துகொண்டிருந்த மற்றொரு கட்டுமரத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகள் தாக்கு ஒரு சிப்பாய் பலியானார்

(கொழும்பு)

திருமலை தும்பலஞ்சோலை பகுதியில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். இச் சம்பவம்கடந்த வாரம் இடம்பெற்றது.

கடந்த புதனன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை மீன் பிடிதுறைமுக பொலிஸ் நிலைய காவல்நிலை மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார்.

# சிறிலங்கா கடற்படைசூடு 4 தமிழக மீனவர் பலி

(சென்னை)

இராமேஸ்வரத்திற்கு அப்பால் இந்திய மீனவர் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 இந்திய மீனவர்கள் பலியாகினர். நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் நிகழ்ந்தது மிக குறுகிய தூரத்தில் வைத்து சிறிலங்கா கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியது இச்சம்பவத்தில் ஒரு மீனவர் காயங்களுடன் உயிர்தப்பியுள்ளார்.

காயமடைந்தவர் பலியான நால்வரினது சடலங்களையும் படகுமூலம்இழுத்துக்கொண்டு நேற்று அதிகாலை இராமேஸ்வரம் வந்து சேர்ந்தார். சடலங்களை இராமேஸ்வரம் பொலிசார் கையேற்றுள்ளனர் காயமடைந்த மீனவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இச்சம்பவத்தையடுத்து இராமேஸ்வரத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கல்முனைநகர்சுற்றிவளைப்பு 22 தமிழ் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கல்முனை நகரை திடீரென சுற்றிவளைத்த சிறிலங்காப்படையினர் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5-ம் திகதி கல்முனை நகர் முதல் 3-ம் குறிச்சிவரை திடீரெனச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் 22 இளைஞர்களையும் கல்முனை சந்தைப்பகுதியில் வயோதிபர், இளைஞர்கள் எனப்பலதரப்பட்டோரையும் கைது செய்த இராணுவத்தினர் அவர்களை வாகனத்திலேற்றி கொண்டு சென்று கடற்கரையில் இறக்கியபின் துரத்தி விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் கைது செய்யப்பட்ட 22 இளைஞர்கள் பற்றிய தகவல் எதுவும் இது வரை தெரியவரவில்லை.

# கப்பல் பொருள்கள் இறக்க கடற்படை கட்டுப்பாடு

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்கு துறையில் கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்க கடற்படையினர் புதிய கட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர்.

கடற்படையினரின் இக் கட்டுப்பாட்டின்படி இனிமேல் மாலை 4.00 மணிவரையுமே இத் துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் வேலை நடைபெறும். இக் குறித்த நேரத்திற்குப் பின்னர் கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்க கடற்படை அனுமதிமறுத்துள்ளது.

இதன் பிரகாரம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'குமாரி' 'றுகுணு' கப்பல்களி

(4ஆம் பக்கம் பார்க்க)

யில்;

இவ் இராணுவ நடவடிக்கையானது இராணுவத்தினரையே மேலும் பலவீனமாக்கியுள்ளது. இந் நடவடிக்கையை ஆரம்பித்தபோது இராணுவத்தளபதிகள் சாவகச்சேரியைப் பிடிப்பதே தமது நோக்கம் என்றார்கள். பின்னர் கிளாலியே தமது இலக்கு என்றார்கள். பின்னர் புலிகளை பலவீனப்படுத்துவதே தமது நோக்கம் என்றார்கள். ஆனால் விளைவு தலைகீழாக உள்ளது.

இராணுவ நடவடிக்கைகளில் 'யாழ்தேவி' நடவடிக்கையின் போதே மிகக்கூடிய இழப்பு இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் தனது பிரசாரத்திற்காக மேற்கொள்ளத் திட்டமிட்ட இந் நடவடிக்கை படுதோல்வி அடைந்தது. அத்துடன் அடுத்த ஜூன் மாதத்திற்கு வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இது இருந்தது.

டுப்பாட்டிலிருந்த இரண்டு படகுத்துறைகளை அழிப்பதும், படகுகளை நாசம் செய்வதும் தங்களது நோக்கமாக இருந்தது என இப்பொழுது இராணுவத் தரப்பினர் கூறுகின்றனர் ஆனால் அப் பகுதியில் இருந்த பல நூற்றுக் கணக்கான படகுகளை புலிகள் அப்புறப்படுத்திவிட்டனர். எஞ்சிய உடைந்த படகுகளையே இவர்கள்எரித்தனர்.

எனவே இரண்டு படகுத்துறைகளை அழிப்பதற்கு இவ்வளவு இழப்புகளும், உயிர்ப் பலிகளும் அவசியமில்லை. விமானப்படை மட்டும் இவற்றை அழித்திருக்க முடியும் என்றார்.

# மாகாண முதலமைச்சராக பிரேமச்சந்திரா பதவியேற்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் புதிய முதலமைச்சராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுச் செயலாளர் ஜி.எம்.பிரேமச்சந்திராநேற்று பதவி ஏற்றார். ஆளுநர் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஐ.தே.கவைச் சேர்ந்த காமினிஜெயக்கிரம பெரேர வடமேல் மாகாணசபை முதலமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஜி எம். பிரேமச்சந்திரா உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். ஐ.தே.கவிற்கு இம் மாகாணசபையில் பெரும்பான்மை இல்லாத நிலையில் ஐ.தே.க உறுப்பினர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் மேல் நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பில் முன்னைய முதலமைச்சரின் நியமனம் தவறானது எனக் குறிப்பிட்டது தெரிந்ததே.

# பாதுகாப்பு செலவிற்கு 3600 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

1994 ஆம் ஆண்டு'க்கான பாதுகாப்புச் செலவிற்கென 3600கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான வளங்களைப்பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கும் முகமாகவே இப்பெருந்தொகைப்பணத்தை ஒதுக்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் முன்வந்துள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

1993 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவிற்கு என ஒதுக்கப்பட்ட தொகையிலும் இது 1300 கோடி ரூபா அதிகமானதாகும். சென்றவருடம் பாதுகாப்பிற்கென 2300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை யுத்தம் முடியும் வரை பாதுகாப்பு வரி அறவிடப்படுவது நிறுத்தப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது

# வடபகுதி பொருள் அனுமதி ஹமில்டனின் வசம்

(கொழும்பு)

வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் தொடர்பான அனுமதி வழங்கும் விடயம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஹமில்டன் வனசிங்காவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மேற்படி விடயத்தைக் கவனிப்பதற்கு கடந்த காலத்தில் நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் இக் கடமையில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுப்படைகள் நடவடிக்கைப் பணியகம் கலைக்கப்பட்டு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு நியமிக்கப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப்பொருள்களை எடுத்துவரும் அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் துறையினர் ஆகியோருக்குரிய அனுமதிகளை வழங்குதல் மற்றும் எடுத்துச் செல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 'றுகுணு' கப்பலிலிருந்து உரம் இறக்குதல் ஆரம்பம்

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் கடற்படையினரின் சோதனையை முடித்துக்கொண்ட 'றுகுணு' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தது இக் கப்பலில் இருந்து உரம் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. அதே சமயம் 'குமாரி' கப்பலில் இருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டன.

யாழ் பிரதான தபால் திணைக்களம் 'குமாரி' கப்பலில் கொழும்பு மற்றும் வெளியூர்களுக்கான 81 தபால் பொதிகளை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

கொழும்பில் இருந்து புறப்படும் 'வாதுவ' கப்பல் 4 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களுடன் எதிர்வரும்12 ம் திகதி பருத்தித் றைக்கு வரு இக் கப்பலில் தனியாருக்கே கூடுதலான பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன. யாழ். செயலகத்திற்கு ஆயிரம் மெற்றிக்

(4ஆம் பக்கம் பார்க்க]

# தி. மு. க. தலைவர் கருணாநிதி இறுதி நேரத்தில் குத்துக்கரணம்

## அரசியலில் தொடரப்போவதாக அறிவிப்பு

(சென்னை)

அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக தி மு. க தலைவர் மு. கருணாநிதி அறிவித்த தனது முடிவை நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டார். கட்சியின் சக தலைவர்களும் தொண்டர்களும் தம்மை நிர்ப்பந்தித்ததையடுத்தே தமது முன்னைய முடிவை கைவிட்டு மீண்டும் அரசியலில நுழைய முடிவு எடுத்ததாக கருணாநிதி நேற்று தெரிவித்தார்.

முன்னதாக நாளை முதல் தாம் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாகவும் கட்சியின் ஏனைய தலைவர்கள் கட்சியை வழி நடத்திச் செல்ல முன் வருமாறும் கருணாநிதி கூறியிருந்தது தெரிந்ததே கட்சியில் வை.கோபாலசாமிக்கும் கருணாநிதிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதையடுத்து தமது பக்கம் மக்களின் அனுதாபத்தை பெறும் பொருட்டு தம்மைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கருணாநிதி கூறியபடியே 'றோ' அறிக்கை தயாரித்தது

## நாஞ்சில் தெரிவிப்பு

(சென்னை)

''தி. மு க.-காங்கிரஸ் கூட்டணி முன்பே முடிவாகிய ஒன்று. வை.கோபாலசாமிக்கு ஆதரவாக விடுதலைப் புலிகள் கருணாநிதியை கொல்ல சதி செய்வதாக மத்திய உளவுத் துறை தயாரித்த அறிக்கை வேறு யாருடைய ஆலோசனையாலும் தயாரிக்கப்பட்ட அறிக்கையல்ல. கருணாநிதியே அவ்வாறு எழுதக்கூறி அதன் படிதயாரித்ததே அவ்வறிக்கை இவ்வாறுஅண்மையில் தி.மு.க விலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் பொதுச் செயலர் நாஞ்சில் மனோகரன் தெரிவித்தார்.

# இன்று 2-ம் லெப். மாலதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாள்

(யாழ்ப்பாணம)

முதல் களப்பலியான பெண் போராளியான 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளை முன்னிட்டு இன்று யாழ், வன்னி, மன்னார் மாவட்டங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2ஆம் லெப். மாலதி வீரச்சாவு அடைந்த இடமாகிய கோப்பாய் வெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் பிற்பகல் 4 மணிக்கு தூபி வணக்கம் இடம்பெறும். அதனையடுத்து கோப்பாய் சந்தி

(4ஆம் .க்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3 1/2 பரப்பு வீடுவளவு விற்பனைக்குண்டு (அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவில்) தொடர்பு:- இல. 80, பழம் றோட், கந்தர்மடம். (6250)

### 12 - 10 - 93 இல் வியாழ மாற்றம்

15. 10. 93 சனிவக்கிரமாற்றம், 31. 10. 93 செவ்வாய் மாற்றம் எல்லாராசிகளின் பலன்கள் ரூபா 10/ எங்கும் விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (நூலாசிரியர் PROF சத்தியதாசன்) (6239)

### விற்பனைக்கு

புதிய சினிமாப் பாடல்கள் உள்ள கொம்பக்ற்டிக்ஸ் C.D. கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நியூ விக்ரேஸ்எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ், B. M C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6243)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாகச் சாதம் போட்டு தரப்படும் கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். [6241]

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சியில் நடந்த வன்செயல்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின்றதுஎன்பதைவாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டிஸ்காவர் அன்ட் றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 7569)

### சகாய விலையில் காலநடை உணவு

கால்நடை உணவு வகைகள் சகாய விலையிலும், சலுகை அடிப்படையிலும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப் படுகின்றன.

மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், கால்நடை உணவு வகைகளை தரமான முறையில் தயாரிக்க

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

பொது நிருவாகத்தில்பட்டப்பின் டிப்ளோமா மாணவருக்கு, நிருவாகச் சட்டத்தைகற்பிப்பதற்குப்போதிய தகைமைகளைக் கொண்டுள்ள பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து இடைவரவு விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் 1993 - 10 - 27 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தகைமைகள்: (1) உரிய பாடத்தில் / துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் முதலாம் அல்லது இரண்டாம்வகுப்பு அல்லதுபட்டப்பின் அல்லது உயர் தொழில் தகைமைகள்.

(2) உரிய துறையில்ஐந்தாண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

கொடுப்பனவு: மணித்தியாலத்திற்கு 200 / ரூபாவும்பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப பயண,உணவுப் படிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும், ஏனைய விபரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனக்கிளை, அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1 /- ரூபா முத்திரை யொட்டப்பட்ட 23 X 10 ச. மீ. அளவுடைய கடித உறையைஅனுப்புதல்வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள்

# பிரச்சினை தீராவிடின் மலையகர் ஆயுதம் ஏந்தும்

வடக்கு - கிழக்கு மாகாண இளைஞர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாததால் அவர்கள் ஆயுதந் தூக்கியுள்ளார்கள். அப்படியான ஒரு சூழ்நிலையை நாம் மலைநாட்டில் உண்டாக்க விரும்பவில்லை. தோட்டங்களிலுள்ள பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணாது விட்டால் தோட்டப் பகுதிகளிலுள்ள இளைஞர்களும் ஆயுதந்தாங்க வேண்டி ஏற்படும்.

இதனை ஊவா மாகாண சபையின் உப தலைவர் எம். சுப்பையா தெரிவித்தார். மேற்படி மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பதுளையில் ஒரு தொழில் நுட்பக்கல்லூரி உள்ளது அதில் தமிழ் மொழி மூலம் கற்கும் பிரிவு இல்லை. தொழில் நுட்பக் கல்லூரியில் ஒரு தமிழ் பிரிவை ஆரம்பிக்கும்படி 1989இல் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட்டைக் கேட்டிருந்தேன். அதன்பிறகு கடந்த இரண்டு வருடங்களாக இந்தச் சபையில் இது பற்றிக் கேட்டுவருகிறேன் ' என்றார்.

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையறுக்கப்பட்டது]

## முக்கிய அறிவித்தல்

### 30. 09 93 திகதியுடன் முடிவடைந்த காலாண்டுக்கான வாக்காளர் பட்டியல்

இச் சங்கத்தின் 30 09. 93 திகதியுடன் முடிவடைந்த காலாண்டுக்கான வாக்காளர் பட்டியல்கள் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளில் 10. 10. 93 திகதி தொடக்கம் பத்து நாட்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கிளை இலக்கம் 01 | நிவாரண விநியோக நிலையம், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி. |
| கிளை இலக்கம் 02 | நிவாரண விநியோக நிலையம், சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். |
| கிளை இலக்கம் 03 | ஆலடி 3ஆம் கிளை அளவெட்டி தெற்கு. |
| கிளை இலக்கம் 04 | நிவாரண விநியோக நிலையம், இ. போ. ச. டிப்போ வீதி, கோண்டாவில். |
| கிளை இலக்கம் 05 | நிவாரண விநியோக நிலையம், உரும்பராய். |
| கிளை இலக்கம் 06 | 3ஆவது கிளை, ஆலடி, அளவெட்டி தெற்கு. |
| கிளை இலக்கம் 07 | கிளை 7, அளவெட்டி தெற்கு. |
| கிளை இலக்கம் 08 | கிளை 8, மல்லாகம் சந்தி, மல்லாகம். |
| கிளை இலக்கம் 09 | கிளை 09, கல்லாரை, மல்லாகம். |
| கிளை இலக்கம் 10 | கிளை 10, மல்லாகம் சந்தி, மல்லாகம். |
| கிளை இலக்கம் 11 | கிளை 11, கலைநகர், அளவெட்டி தெற்கு |
| கிளை இலக்கம் 12 | கிளை 12, நீதிமன்ற வீதி, மல்லாகம். |

இவ்வாக்காளர் பட்டியல்களில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் 20.10.93 திகதிக்கு பிந்தாமல் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். மேற்படி 12 கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் சங்க தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

அளவெட்டி ம. ப. நோ. கூ. சங்கம்,
உரும்பராய் வீதி,
மருதனார்மடம்.
10 - 10 - 93

வே. தர்மராஜா
செயலாளர்.


(சி-7576)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



## 1-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
24 6 1954

இறப்பு
6-10-1992

திதி: 10-10-1993

### காசிப்பிள்ளை சண்முகநாதன்

கை கொடுத்த தெய்வம் இன்று
எங்கு சென்றதோ எம்மைக்
காத்திருக்க வைத்து விட்டு
அப்பா நீங்கள் எங்கு சென்றீரோ.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

38, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்

(6245)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-10-10

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

தமிழீழ இந்தியப் போரில் வீரச்சாவெய்திய முதற் போராளி

அன்ரன் (இரத்தினம் பரமேஸ்வரன் - வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை. யாழ்)

இதேசமரில் வீரச்சாவெய்திய-

நிமல் (பொன்னையா பூபாலசிங்கம்-கெற்பலி மிருசுவில்)

யாழ்-கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின் போது விழுப்புண் அடைந்தநிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

மகளிர் படைப்பிரிவில் வீரச்சாவெய்திய முதற் போராளி;

2ம் லெப். மாலதி (சகாயசீலி பேதுறு-ஆட்காட்டிவெளி அடம்பன் - மன்னார்)

இதேபகுதியில் நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

தயா (சலேற்றம்மா செபஸ்ரீயான் - பெரியநாவற்குளம், மாந்தை - மன்னார்)

ரஞ்சி (யோகம்மா கதிரேசு - அலைக்கல்லுபோட்டகுளம் ஓமந்தை - வவுனியா)

2ம்லெப் கஸ்தூரி (வதனீஸ்வரி கோபாலபிள்ளை- 765, வதனீஸ்வரிவீதிவட்டக்கச்சிகிளிநொச்சி)

யாழ் கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியானபொதுமகள்

இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின்றதுஎன்பதைவாடிக்கையாளர் கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டிஸ்கவர் அன்ட் றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 7569)

## சகாய விலையில் கால்நடை உணவு

கால்நடை உணவு வகைகள் சகாய விலையிலும், சலுகை அடிப்படையிலும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப் படுகின்றன.

மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், கால்நடை உணவு வகைகளை தரமான முறையில் தயாரித்து கறவைப்பசு, முட்டையிடும் கோழி, குஞ்சுகள், இறைச்சிக் கோழி, வளரும் குஞ்சு போன்றவற்றிற்கு உகந்த உணவினை நியாய விலையில் தற்போது வழங்கி வருகின்றது. இதனால் சிறு பண்ணையாளர்களும், பால், முட்டை வழங்குநர்களும் பெரிதும் பயனடைய வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனக்கிளை, அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 X 10 ச. மீ. அளவுடைய கடித உறையைஅனுப்புதல்வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 - 10 - 08.
(சி-7575)

இவ்வாக்காளர் பட்டியல்களில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் 20.10.93 திகதிக்கு பிந்தாமல் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். மேற்படி 12 கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் சங்க தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்.


அளவெட்டி ம. ப. நோ. கூ. சங்கம்,
உரும்பராய் வீதி,
மருதனார்மடம்.
10 - 10 - 93

வே. தர்மராஜா
செயலாளர்.

(சி-7576)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

# நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



**இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் காலம்: 16 10.93 நேரம்: இரவு 6.00 மணி**

## நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" தன்முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஓரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை கொண்டையினால் இழுத்தல்.
(உ) 35கிலோஎடையுள்ளஇரும்புக்குண்டினை 7அடிஉயரத்திலிருந்து வயிற்றில்ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3''200 ஆணி) அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2 மோகன்மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டிவிளையாட்டுக்கள்.
3 கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

### டிக்கெற் கிடைக்குமிடம்

| | |
|---|---|
| "வெஸ்கோ" | ஆஸ்பத்திரி வீதி, யாழ். |
| "குறிஞ்சி" | திருநெல்வேலி சந்தை |
| "நாதன் மருந்தகம்" | கல்வியங்காடு |
| "தாவடி மெடிக்கல்ஸ்" | கோண்டாவில் |
| "மெடி இஸ் குயர்ஸ்" | மானிப்பாய் |
| "மெடிப் பிளஸ்" | சங்கானை |
| ஸ்ரீமுருகன்நெல்லியடி - | பருத்தித்துறை |
| "அம்பாள் பாமசி" | சாவகச்சேரி |

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியை தவிர்க்க முடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(சி/7532)

**வ யா. ஆ. ம. வ. சங்கம்**

க்கு, நெல்லிப்பழை, யாழ்)

இதேசமரில் வீரச்சாவெய்திய-
**நிமல்** (பொன்னையா பூபாலசிங்கம்-கெற்பலி மிருசுவில்)

யாழ்-கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின் போது விழுப்புண் அடைந்தநிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

மகளிர் படைப்பிரிவில் வீரச்சாவெய்திய முதற் போராளி;
**2ம் லெப். மாலதி** (சகாயசீலி பேதுறு-ஆட்காட்டிவெளி அடம்பன் - மன்னார்)

இதேபகுதியில் நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-
**தயா** (சலேற்றம்மா செபஸ்ரியான் - பெரியநாவற்குளம், மாந்தை - மன்னார்)
**ரஞ்சி** (யோகம்மா கதிரேசு - அலைக்கல்லுபோட்டகுளம் ஓமந்தை - வவுனியா)
**2ம்லெப் கஸ்தூரி** (வதனீஸ்வரி கோபாலபிள்ளை- 765, வதனீஸ்வரிவீதிவட்டக்கச்சிகிளிநொச்சி)

யாழ் கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியானபொதுமகன்

1988ஆம் ஆண்டு வவுனியா - கொந்தக்காரன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப் பார்த்தசாரதி** (நடராசா யோகநாதன்- 3ஆம் வட்டாரம், முள்ளியவளைமுல்லைத்தீவு)
**மேஜர் தாடிபாலா** (சண்முகம் இராசரத்தினம் - அனந்தர் புளியங்குளம் வவுனியா)
**லெப் ஆனந்** (இ. ரகு. குருமண்காடு - வவுனியா)
**2-ம் லெப் சிவா** (எட்வேட் யோசப் - விவேகானந்த நகர் - கிளிநொச்சி)
**கப்டன் சைமன் / ராசா** (தொம்மை அந்தோனி - அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல் மன்னார்)
**லெப் பீற்றர்** (மனுவேல் யோகராசா - பரப்புக்கடந்தான் - மன்னார்)
**2-ம் லெப். இராசதுரை / எம் ஜீ ஆர்** (மனுவேல் அந்தோனிதாசன் - பரப்புக்கடந்தான் - மன்னார்)
**2 ம் லெப் ஜெயநுதன்** (பிலிப்பு பிரான்சிஸ் - நாவற்குளம் - மன்னார்)
**2-ம் லெப். ராஜேந்தர்** (மாரியப்பன் சிறிதரன் - புதுக்குடியிருப்பு - மன்னார்)
**2-ம் லெப். நியாஸ்** (சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் நானாட்டான் - மன்னார்)
**2 ம் லெப். கருணா** (சவிரி யோகரட்ணம் - அடம்பன் மன்னார்)
**ரவிகாந்த்** (அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்- மாந்தை - மன்னார்)

1990ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**இந்திரன்** (கனகரத்தினம் இந்திரவேல் - வியாங்கொடை தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

யாழ் அச்செழுவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**தயாளன்** (துரைசிங்கம் ஜீவன் - தையிட்டி, காங்கேசன் துறை - யாழ்)

1991ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு-வந்தாறுமூலையைச்சேர்ந்த தமிழிளைஞன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7572]

# 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 06 — 1937



மறைவு: 10 — 09 — 1993

அமரர்

## சரவணமுத்து விசுவலிங்கம் அவர்கள்

எங்கள் குல விளக்கே! எம்மை எல்லாம் சீரோடும் சிறப்போடும் வாழ வைத்து இன்புறும் வேளையில் எம்மை விட்டு தாங்கள் பிரிந்த துயர் எமக்கு ஆறாத் துயரை தருகின்றது ஐயா.

தங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் என்றும் வணங்கும் விசவத்தனை வேலவன், வழக்கம்பரை அம்பாள் பாதங்களை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

பண்ணாகம் தெற்கு.
சுழிபுரம்.
10 - 10 - 93 (6235)

மாநகர யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

துணிவு வளர்வது, எண்ணிக்கையில் இருந்து அல்ல இதயங்களில் இருந்து தான்.

ஜான் ட்ளுடன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 10-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## இந்தியாவின் துரோகம்

**1987** ஒக்ரோபர் 10,

இலங்கைத் தமிழ் மக்களின் நினைவுகளில் இருந்து அகல முடியாத நாள். அன்று தான் இந்திய இராணுவம்விடுதலைப் புலிகளுக்கு எதிராகஎனக்கூறி தாக்குதலை ஆரம்பித்த நாள். அமைதிப் பணிக்கென வந்த இராணுவம், ஒரு தலைப் பட்சமாக ஆயுதப் பிரயோகத்தில் ஈடுபடத் தொடங்கிய நாள்.

ஆனால், இந்தியா கூறிக் கொண்டது போல் இது விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை அல்ல. தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கையாகும். தென்னாசியாவில் எழுந்த ஒரு தேசிய இனத்தின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கி விட எடுத்த முயற்சியாகும்.

தமிழரின் தேசிய இன விடுதலைப் போரையும், அதற்கு தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளையும் இந்தியா எப்பொழுதும் சந்தேகக் கண்ணுடனேயே பார்த்தது. தென்னாசியாவில் தனது கைக்கு மீறிய செயல்கள் எதுவும் இடம்பெறக் கூடாது என்பதில் மிக அக்கறையாக இருந்த இந்திய அரசு தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் தனது கையை மீறிய தொன்றாக போய் விடுமோ என்பது குறித்து எப்பொழுதுமே அச்சம் கொண்டிருந்தது. இதற்கு விடுதலைப் புலிகளின் தலைமைத்துவமே காரணமாக அமையலாம் என்றும் அது கருதியது.

இதன் காரணமாக, ஆரம்பம் முதலே விடுதலைப் புலிகள் தொடர்பாக இந்தியா ஒரு கெடுபிடி நிலையையே கடைப்பிடித்து வந்தது. இந்தியாவுடன் நல்லெண்ண உறவைப் பேண விடுதலைப் புலிகள் விரும்பிய போதும் இந்தியா அதில் அக்கறை காட்டவில்லை.

1987 இல், சிறிலங்கா - இந்தியா சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட வேளை, இவ் உடன்பாடு தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கும் என விடுதலைப் புலிகள் அறிந்திருந்தனர். ஆயினும் இந்திய அரசுடன் மோதல் ஒன்றை தவிர்க்கும் நோக்கில் ஆயுதங்களை கையளிக்க அவர்கள் ஒப்புக் கொண்டனர். தலைவர் பிரபாகரன் சுதுமலையில் இடம்பெற்ற கூட்டத்தில் இதனைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியும் இருந்தார்.

ஆனால், ஆரம்பம் முதலே இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அழித்துவிட வேண்டும் என்ற ரீதியிலேயே செயற்பட்டு வந்தது. இந்தியாவின் இந் நிலைப்பாட்டை இலங்கைக்கான

# நீதிமன்றத்தின் தீர்ப்பு மக்களுக்கு கிடைத்த வெற்றி

**-ஜி. எம். பிரேமச்சந்திரா**

(கொழும்பு)

மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல் ஆளுமை படைத்தவர்கள் தமது கட்சியை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினார்கள். அவர்களின் செய்கைக்கு நீதிமன்றத் தீர்ப்பு சரியானதோர் பதிலைக் கொடுத்துள்ளது என மேல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தவர்களில் ஒருவரான ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் பொதுச் செயலாளரும், வடமேல் மாகாண வேட்பாளருமான ஜி. எம், பிரேமச்சந்திராதெரிவித்தார்.

அவர் பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில், நீதிமன்றம் சாதகமான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. இது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வெற்றி நாட்டு மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் எனவும் தெரிவித்தார்.

## எழுதுவினைஞர்களின் பதவி உயர்வு பரீட்சை கொழும்பில் நடக்கும்

**– அரசாங்க அதிபர்**

அரசாங்க எழுதுவினைஞர்களின் பதவி உயர்விற்கான போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறு அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் கொழும்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்னும் ஓரிரு தினங்களில் கொழும்பு செல்லும்போது மேற்படி வேண்டுகோளை வலியுறுத்த இருப்பதாகவும் ஆனால் இது சாத்தியப்படும் என்று தான் கருதவில்லைஎனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு தோற்ற இருப்பவர்கள் தாமாகவே கொழும்பு செல்வது விரும்பத்தக்கது எனத் தம்மைச் சந்தித்த பரீட்சார்த்திகளிடம் அரசாங்க அதிபர் ஆலோசனை கூறியிருப்பதாகப் பரீட்சார்த்திகள் கூறியுள்ளனர்.

## துப்பாக்கி வழங்க அனுமதி

[கொழும்பு]

விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்படும். இதற்கான முடிவை அரசு எடுத்துள்ளது இவை மூன்று மாத காலத்திற்கே செல்லுபடியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் அத்தியட்சகர்களிடமிருந்து விவசாயிகள் துப்பாக்கிக்கான அனுமதி பெறமுடியும் எனவும் எக்காரணம் கொண்டும் துப்பாக்கியால் யானைகளை சுட முடியாது எனவும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,

ஊர்காவற்படை தலைமையகத்தை சேர்ந்த 50 பேரைக் கொண்ட இடம்பெயர் குழு விவசாயிகளுக்கு இது தொடர்பான உதவிகளை அளிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**கடமையில் இருக்கும் வேளை**

## மரணமடையும் ஊழியருக்கு நஷ்டஈடு வழங்க பணிப்பு

(கொழும்பு)

கடமையில் இருக்கும்போது காயமடையும் அல்லது மரணமடையும் அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. இது சம்பந்தமான சுற்றறிக்கையொன்று சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் வீட்டிலிருந்து கடமைக்கு வரும் போது அல்லது கடமை முடிந்து வீட்டிற்கு செல்லும்போது விபத்துக்குள்ளானாலும் இந்த நஷ்டஈடு வழங்கப்படும் என்றும், மரணம், மற்றும்முற்றாக அங்கவீனமடைதல், காயமடைதல் தன்மைக்கேற்ப நஷ்ட ஈட்டுத்தொகை தீர்மானிக்கப்படவுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணிப்பாளர் யாழ். இரும்பினார்

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள் மூவர் நேற்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இவர்கள் 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து பின்னர் யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், கதிரித்தம்பி சபாநாதன், சபாரட்ணம் சிவகுமாரன் ஆகியோரே வந்தவர்களாவர். (யோ)

## மத்திய தபால் நிலையத்திற்கு சீனாவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

நவீன வசதிகள் கொண்ட மத்திய தபால் நிலையம் ஒன்று சீனாவின் உதவியுடன் அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய உத்தேச தபால் பரிவர்த்தனை நிலையத்தை அமைப்பதற்கு சீனா 40 கோடி

களையும் கொண்ட மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் இன்னும் இரு ஆண்டுகளில் செயற்படத் தொடங்கும். உத்தேச நிலையத்தில் நவீன தபால் நிலையம் ஒன்றும் அமையவுள்ளது. ஆண்டு ஒன்றிற்கு பதினேழு லட்சம் பார்சல்கள் உட்பட 31 கோடி தபால்களைத் தரம் பிரிப்பதற்கான வசதியை இவ் உத்தேச நிலையம் கொண்டிருக்கும். இந்த நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் நாட்டில்

## விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

# செயலுக்குரிய காலம் இது

அன்பின் தம்பி தங்கைகளுக்கு, 1993-10-09

''பேய்க்காட்டல்!''

இவ்விதம் ஒரு சொல் இருக்கின்றது, தெரியுமா? இது மட்டுமல்ல-

'பொய் புரட்டு' -இவையும் தமிழ்ச் சொற்கள் ,ஆனால் கயவருக்குரிய சொற்கள்!

இவற்றையே செயலளவிலும் கையாண்டு வருகிறது சிங்கள அரசு! தனது கயமைகளையும் கொடுமைகளையும் மறைக்க அது பாவிக்கும் கவசம் இதுதான்!

உலகை ஏமாற்றும் போர்வை!

உலக அரங்கில் இரந்து கையேந்தி உதவிபெறக் கையாளும் உபாயம் இவர்களது பௌத்த தர்ம உபதேசங்களாகும்!

இந்த இவர்களது புரட்டு நாக்குத்தான் இங்கு 'இனப் பிரச்சினை இல்லை' எனவும் வெளியுலகிற் பொய்யுரைக்கிறது!

இதையிட்டு நாம் அதிகம் கவலைப்படத் தேவையில்லை;

ஆனால், இந்தப் பொய்யர் கூட்டத்தினால் நாம் அழிபடத் தயாரில்லை!

எம்மை எதிர்கொண்டு நிற்பது எம் வாழ்க்கைப் பிரச்சினை!

நாம் வாழ்வதா? அல்லது அழிவதா? தமிழினத்தை முற்றாக அழிய விடுவதா? நாம் தீர்மானிக்க வேண்டியிருப்பது இதுவே!

தம்பி தங்கைகளே, மன்னியுங்கள் இது தீர்மானித்து நிற்கும் காலமும் அல்ல! -செயலுக்குரிய காலம்!

கயவன் ஆக்கிரமிப்பாளனாக, அதற்கென ஆயுதம் தாங்கியவனாக, வருகிறான்! எம் தமிழீழத்தை தான் ஆள — தனதாக்க வருகிறான்! ஆக்கிரமிப்பு மட்டுமல்ல, இன அழிப்பு என்பதே அவன் நோக்கு! நெஞ்சிலே இந்த நஞ்சு பூண்டவனாய் அவன் வருகிறான்!

அவன் பயங்கரவாதி! அவனது அரசே உலகம் கண்டித்து நிற்கும் பயங்கரவாத அரசு!

அவனுடன் வாழ்வது இனி முடியாத ஒன்றாகி விட்டது! உண்மை பேசாத, ஒப்பந்தங்களைக் கிழித்தெறியத் தயங்காத அரசு இந்தச் சிங்கள அரசு,

அது தன் நெஞ்சிற் பதித்து நிற்பது தமிழ்மண் ஆக்கிரமிப்பும் தமிழின அழிப்பும் மாத்திரமே!

வெறியாட்டம், கொடுமை, பொதுமக்கள்மீதுகொஞ்சமா!

தென் தமிழீழத்தின் சில ஆக்கிரமிப்புப் பகுதிகளிலே அவனது அடக்குமுறை, அட்டூழியம், கட்டவிழ்த்து நிற்கின்றன.! அங்கும் இன்னும் பல பகுதிகளிலும் எம் தமிழ்ப் பொதுமக்கள் படும் பாடு—?

இங்கு ஒரு சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்,

அது நெஞ்சில் நீங்க முடியாத காட்சியாய் நிற்கிறது. நீங்களும் பகிர்ந்து கொள்ளுங்கள்'

கொடுமையாளர்களால் தாக்கிக் கைவிடப்பட்ட கிராமமொன்றில் சிறு குழந்தையொன்று விளையாடக் காணப்பட்டதாம்.

தத்தித் தவழ்ந்து சேற்றில் கையளைந்து விளையாடிக் கொண்டிருந்ததாம் அந்தக் குழந்தை! ஆனால் சேறு?

அது அருகே கழுத்தில் வெட்டப்பட்டுக் கிடந்த தாயின் இரத்தம் அந்த உறைந்து முடியாத தாயின் இரத்தத்தில்தான் குழந்தை விளையாடிக்கொண்டிருக்கிறது.

-இது நேரிற் கண்ட நெஞ்சத்தை இறுக்கும் காட்சி.

இந்தக் கோரம் அங்கும் நிகழலாம், எங்கும் நிகழலாம். இங்கும் நிச்சயம் நிகழலாம்.

இவ்வளவிற்கும் அவன் அவ்வளவு வீர வரலாறு படைத்தவனும் அல்ல!

அடிவிழும்போது 'அம்மே' என்று ஓடுபவன்! பல முறை ஓடியவன்! பிடிபட்டவன்! பின்நகர்த்தப்பட்டவன்!

தனது ஆள் எண்ணிக்கைப் பெருக்கத்தை பலமென மதித்து வருகிறான்.

அவனிடம் எண்ணிக்கைகூட. ஆனால் அடைந்த தோல்வி

யலாம் என்றும் அது கருதியது.

இதன் காரணமாக, ஆரம்பம் முதலே விடுதலைப் புலிகள் தொடர்பாக இந்தியா ஒரு கெடுபிடி நிலையையே கடைப்பிடித்து வந்தது. இந்தியாவுடன் நல்லெண்ண உறவைப் பேண விடுதலைப் புலிகள் விரும்பிய போதும் இந்தியா அதில் அக்கறை காட்டவில்லை.

1987 இல், சிறிலங்கா - இந்தியா சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட வேளை, இவ் உடன்பாடு தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கும் என விடுதலைப் புலிகள் அறிந்திருந்தனர். ஆயினும் இந்திய அரசுடன் மோதல் ஒன்றை தவிர்க்கும் நோக்கில் ஆயுதங்களை கையளிக்க அவர்கள் ஒப்புக் கொண்டனர். தலைவர் பிரபாகரன் சுதுமலையில் இடம்பெற்ற கூட்டத்தில் இதனைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியும் இருந்தார்.

ஆனால், ஆரம்பம் முதலே இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அழித்துவிட வேண்டும் என்ற ரீதியிலேயே செயற்பட்டு வந்தது. இந்தியாவின் இந் நிலைப்பாட்டை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிற் வெளிப்படையாக அறிவித்தும் இருந்தார். யுத்தம் தொடங்குவதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர், கொழும்பில் தன்னைச் சந்தித்த ஆங்கிலப் பத்திரிகையாளர் ஒருவரிடம் ''பிரபாகரனிடம் போய்ச் சொல்லு, நாங்கள் யுத்தத்திற்குத் தயார் என்று'' எனக் குறிப்பிட்டதிலிருந்தே இதனை விளங்கிக் கொள்ளலாம்.

அதேவேளை மறைமுகமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளையும் தொடங்கியிருந்தார். தங்களின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ்க் குழுக்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏவி விட்டனர். இத் தமிழ்க் குழுக்கள் ஆயுதமற்றிருந்த விடுதலைப் புலிகள் பலரைக் கொன்று குவித்தனர். அதாவது புலிகளை ஆயுதப் போராட்டத்தை நாடுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் இல்லை என்ற நிலையை உருவாக்கினர்.

உண்மையில் 1987இல் இந்தியாவும் - சிறிலங்காவும் செய்து கொண்ட சமாதான உடன்பாடானது இலங்கைத் தமிழருக்கு எதிரான இந்தியாவினதும் - சிறிலங்காவினதும் கூட்டுச் சதி என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இவ் ஒப்பந்தத்தின் மூலம் தான் ஒரு பெரிய இராஜதந்திர வெற்றியைப் பெற்றுவிட்டதாக அப்போதைய சிறுலங்கா ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா எண்ணினார். அவர் ஒரு துளி மையினால், தமது ஜெனரல்களினதும், சிங்கள இளைஞர்களின் உயிரைக் காப்பாற்றி விட்டதாகவும், தமிழர்களின் நட்பு சக்தியான இந்தியாவை அவர்களுடனேயே மோத விட்டுவிட்டதாகவும், அது தமக்குக் கிட்டிய பெரு வெற்றியாகவும் கருதினார்.

இதேவேளை, இந்தியாவும் இவ் ஒப்பந்தத்தின் மூலம் பல இராஜதந்திர ரீதியான வெற்றிகளைப் பெற்றுவிட்டதாகவும், 'தென்னாசியாவின் காவலன்' தான் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட்டதாகவும் கருதியது. இதற்கு முட்டுக்கட்டையாக உள்ள தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தையும் அதற்கு தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளையும் அழித்து விட இவ் ஒப்பந்தம் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அது கருதியது.

ஆனால், தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் இந்திய வல்லாதிக்கத்திற்கு அஞ்சி அடி பணியவில்லை. எதிர்த்துப் போரிட்டனர். அரசியல் சதுரங்கத்திலும், இராணுவ நடவடிக்கையிலும் விடுதலைப் புலிகளிடம் அவர்கள் தோல்வி காணவேண்டியதாயிற்று. இதன் மூலம் தேசிய இனங்களின் எழுச்சியை எந்த வல்லாதிக்க சக்தியாலும் அடக்கிவிட முடியாது என்ற வரலாற்றுப் பாடத்தில் மேலும் ஒரு அத்தியாயம்சேர்க்கப்பட்டது.

---

சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

'அரசாங்க ஊழியர்கள் வீட்

... மடைதல் தன்மைக்கேற்ப நஷ்ட ஈட்டுத்தொகை தீர்மானிக்கப்படவுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய தபால் நிலையத்திற்கு சீனாவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

நவீன வசதிகள் கொண்ட மத்திய தபால் நிலையம் ஒன்று சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட வுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய உத்தேச தபால் பரிவர்த்தனை நிலையத்தை அமைப்பதற்கு சீனா 40 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்கவுள்ளது. நிலையத்திற்கான 8 மாடிக்கட்டடத்தை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பையும் சீனா ஏற்றுக் கொண்டுள்ளது. எலக்றோனிக் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தபால்களைத் தரம்பிரிக்கும் வசதி உட்பட நவீன வசதிகளையும் கொண்ட மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் இன்னும் இரு ஆண்டுகளில் செயற்படத் தொடங்கும். உத்தேச நிலையத்தில் நவீன தபால் நிலையம் ஒன்றும் அமைய வுள்ளது. ஆண்டு ஒன்றிற்கு பதினேழு லட்சம் பார்சல்கள் உட்பட 31 கோடி தபால்களைத் தரம் பிரிப்பதற்கன வசதியை இவ் உத்தேச நிலையம் கொண்டிருக்கும். இந்த நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் நாட்டில் உள்ள 550 பிரதான தபால் நிலையங்கள் மூலமும் 3000 தபால் நிலையங்கள் மூலமும் தபால் விநியோகத்தை சீராக மேற்கொள்ள முடியும். தபால்களைத் தரம் பிரிப்பதற்கென ஒவ்வொரு நகரத்திற்கும் தபால் குறியீட்டு எண் வழங்கப்படும்.

## ரயில்வே திணைக்களத்தால் வருடம் 40 கோடி நட்டம்

(கொழும்பு)

சிறிலங்காவில் ரெயில்வே திணைக்களத்தால் வருடம் 40 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ரயில்களாலேயேமேற்படிநட்டம் வருடாவருடம்ஏற்பட்டுவருவதாகவும் இவ்வாறு ஏற்படும் நஷ்டத்தினை சமாளிக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரேவழி ரெயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதேயாகும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதே நேரத்தில் சிலிப்பர் கட்டைகள் எரிபொருள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் திணைக்களம் 25 கோடி ரூபா கடனைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்பல்கலைஇயங்குகிறதா? கொழும்பில் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் தற்பொழுதும் இயங்குகிறதா என்று தென்பகுதியில் இயங்கும் சில அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் சந்தேகம் நிலவுகிறது.

கொழும்பில் இயங்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய அரச திணைக்களங்களின் சில அதிகாரிகளுக்கு இவ்வாறான சந்தேகம் நிலவுகிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கொழும்பு செல்லும் சமயங்களில் இவ்வாறான சந்தேகப்பேர்வழிகள் பலரைச் சந்திக்கக் கூடியதாக உள்ளதாக கூறுகின்றனர் யாழ். பல்கலைக்கழகம் இப்பொழுதும் இயங்கக் கூடியதாக இருக்கிறதா? என்று இச் சந்தேகப் பேர்வழிகள் வியப்புடன் வினாவுகின்றனராம். [க], [நி]

### பதாகைகள் கட்டப்பட்டுள்ளன

தமிழீழ மண்மீட்புப் போரில் முதல் முதல் தன்னுயிர் ஈந்த பெண் போராளி 2ஆம் லெப். மாலதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை ஞாயிறு தமிழீழமெங்கும் அனுட்டிக்கப்பட இருக்கிறது.

அதற்கான முன்னோடி நடவடிக்கையாக வீதிகளுக்கு குறுக்கே பதாகைகள் குடா நாடெங்கும் கட்டப்பட்டுள்ளன. (2?)

---

எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பணிப்பாளர் யாழ். திரும்பினார்

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள் மூவர் நேற்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இவர்கள் 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து பின்னர் யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், கதிரித்தம்பி சபாநாதன், சபாரட்ணம் சிவகுமாரன் ஆகியோரே வந்தவர்களாவர். (யோ)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு நடாத்தும் வினாவிடைப் போட்டியின் விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் இருபதாம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இப் போட்டிக்கான விண்ணப்பங்கள் இன்றுவரை மட்டுமே ஏற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

## சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் சங்கானைப் பிரதேச நிலையத்தில் இலவச தையல் பயிற்சியினை முடித்துக் கொண்ட மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும், கௌரவிப்பும் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் தேர்வில் சித்தி பெற்ற மாணவிகளுக்கான பரிசில்களை சங்கானை உதவி அரசாங்க அதிபர் செல்வி ரூபினி கனகரத்தினம் வழங்கினார், சான்றிதழ்களை சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு பா. செல்வரத்தினம் வழங்கினார்.

மேலும் இந் நிகழ்வின் போது குறுகிய காலத்தினுள் சிறந்த முறையில் '' விடை கிடைத்தபோது '' எனும் சமூக நாடகத்தை தயாரித்து வழங்கிய சித்தன்கேணி திருமதி இ. தனம் அவர்களும், '' எல்லோர்க்கும் விடிவு '' எனும் வில்லிசையை தயாரித்து வழங்கிய யாழ் சர்வோதய சிறுவர் பகுதியின் தொண்டர்களும், நிகழ்ச்சி அலங்கரிப்பினை திறம் பட ஆக்கி அமைத்த தொல்புரம் மத்திய சனசமூக நிலைய தொண்டர்களும் விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள். (41)

---

விரும்புகிறேன்,

அது நெஞ்சில் நீங்க முடியாத காட்சியாய் நிற்கிறது. நீங்களும் பகிர்ந்து கொள்ளுங்கள்'

கொடுமையாளர்களால் தாக்கிக் கைவிடப்பட்ட கிராமமொன்றில் சிறு குழந்தையொன்று விளையாடக் காணப்பட்டதாம்.

தத்தித் தவழ்ந்து சேற்றில் கையளைந்து விளையாடிக் கொண்டிருந்ததாம் அந்தக் குழந்தை! ஆனால் சேறு?

அது அருகே கழுத்தில் வெட்டப்பட்டுக் கிடந்த தாயின் இரத்தம் அந்த உறைந்து முடியாத தாயின் இரத்தத்தில்தான் குழந்தை விளையாடிக்கொண்டிருக்கிறது.

-இது நேரிற் கண்ட நெஞ்சத்தை இறுக்கும் காட்சி.

இந்தக் கோரம் அங்கும் நிகழலாம், எங்கும் நிகழலாம். இங்கும் நிச்சயம் நிகழலாம்.

இவ்வளவிற்கும் அவன் அவ்வளவு வீர வரலாறு படைத்தவனும் அல்ல!

அடிவிழும்போது 'அம்மே' என்று ஓடுபவன்! பல முறை ஓடியவன்! பிடிபட்டவன்! பின்நகர்த்தப்பட்டவன்!

தனது ஆள் எண்ணிக்கைப் பெருக்கத்தை பலமென மதித்து வருகிறான்.

அவனிடம் எண்ணிக்கைகூட. ஆனால் அடைந்த தோல்விகளும் பல!

அதர்ம உணர்வு, ஆதிக்க அவா, கூலிக்கென வந்த வேலை, சலுகை, ஒழுக்கமின்மை, இலட்சியமின்மை, தார்மீக பலமின்மை—

ஆனால் ஆள் எண்ணிக்கை என்ற பலத்தை நம்பி வருகிறான்.

எமது இலட்சிய பலம் வேறு! இந்த இலட்சிய தாகம் தார்மீக பலம், ஒழுங்கு, கட்டுப்பாடு, தீரம், தியாகம், விடுதலைக்காக-எம் வாழ்கைக்காக -போராடிநிற்கும்தூய்மையின், உரிமை, உலகினின் மேலான தலைமை, எம் பகைவர்க்கு எட்டாத ஒன்று!

இது எமக்கே உரியது! எம் வெற்றிக்கு உரியது.

ஒன்றுக்குப் பத்தென நிற்கும் எம் பகைவரின் அணியை நாம் திகைத்து வைத்து நிற்கிறோம்! இன்னல் எண்ணரியவரினும் எதிர் கொண்டு போராடி நிற்கிறோம்!

எமக்குரிய கடலுள் நாம் இறங்கக்கூடாது! இது அந்த ஈனர்கள் இயற்றியுள்ள சட்டம்! இதைவைத்து எம் மீனவர் பலியாக்கப்படுகின்றனர் -

இவர்களை எதிர்த்து விரட்டாது நாம் வாழ முடியுமா?

நாம் வேண்டுவது விடிவு! எம் இனத்தின் விடுதலை!

அந்தப் பேடிகளின் எண்ணிக்கையைக் குறைப்போம்!

நாம் ஆயுதம் ஏந்திய இனம் என்பதனாலேயே எதிரி இன்னும் உள்நுழையாது நிற்கிறான். ஆனால் நுழைந்திட நிற்கிறான்.

நாம் பலம்கொள்ளும் வேளை இது.

உங்கள்
ஐயப்பன்

---

## 2-ம் லெப். மாலதியின் 6-ம் ஆண்டு நினைவாக

புரட்சிப் பெண்கள் படையணியின்
புதுவரலாற்றின் அகரம் நீ.
சின்னப் பொறிகளும் பெரு நெருப்பாய்
மூண்டது உந்தன் சாவு கண்டு-எம்
எல்லைக்குள் நுழையும் எதிரிகளை
வீழ்த்துவோம் என்பதில் உறுதிகொண்டு.
அடுப்போடு போராடும் பெண்களுக்குப்
பொறுப்போடு படைநடத்தும் வலிமையுண்டு என்று
மிடுக்கோடு சொல்லி நீ விழி மூடினாய்-வீர
நெருப்பாகி எங்களின் மனம் ஏறினாய்.
ஏளனங்கள், இழிமொழிகள் பொசுங்கிடவே
-பெண்ணின்
ஆளுமை ஆற்றலும் விளங்கிடவே
வீரமுடன் நீ விழுந்து வித்தாகினாய் எம்
தாகமதில் நீ உறைந்து உரமாகினாய்.

-சக்தி

## தீக்குளிக்க முயன்ற மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி அரசியலில் இருந்து ஒய்வு பெறப்போவதாக நேற்று முன்தினம் அறிவித்த போது கட்சியின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தீக்குளித்து தற்கொலைசெய்ய முயன்றதாகவும் எனினும்மாநிலத்தில் நிலவிய மண்ணெண்ணெய் பற்றாக்குறையே இவர்களின் முயற்சிக்கு தடையாக இருந்ததாகவும் பி.ரி.ஐ. செய்திகள் தெரிவித்தன.

தீக்குளித்து தற்கொலை செய்ய முயன்ற மூவர் எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

ஆண்டவன் அந்நியன்

படைப்பு: அழிப்பு:



1938-07-26 1993-08-27

அமரர்

### சிற்றம்பலம் இராமச்சந்திரன்

(செயலாளர் உற்பத்திக்குழு சுளிபுரம் மத்தி)

பாசமிகு பப்பாவே தமிழீழத்தில் விவசாயப்
புரட்சி வேண்டும் என்றீர்,
யாரும் எங்களை ஆதரிக்க ஒருவரும் இல்லையா என்ற
காயப்பட்டவர்களின் குரல்கேட்டு உதவி செய்ய
சென்றீர்
அந்தோ சிங்கள இனவெறியரின் கோரக்
குண்டு வீச்சிற்கு பலியானீர்கள், பப்பா,
என்னையும் பக்குவமாக சென்றுவா கொழும் பென்றீர்
ஆனால் நீரோ எங்களையெல்லாம் விட்டெங்கு
சென்றீர்
இனி எப்போ காண்போம் உங்கள் திருமுகத்தை.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
நெல்லியான் வீதி, மருமகன், பேரப்பிள்ளைகள்,
சுளிபுரம் உறவினர்கள், நண்பர்கள்.
10-10-1993 (சி-7577)

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



# தமிழீழம் அமைக்குமாறு தி. மு. க கோரவில்லை

### கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

''விடுதலைப் புலிகள் இயக்கம் கோருவது போல் தனித் தமிழ் ஈழம் அமைக்கப்பட வேண்டும் என தி. மு. க கோரவில்லை'' இவ்வாறு மு. கருணாநிதி நேற்று பகிரங்கமாக முதல் தடவையாக கூறினார். அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதான தனது முன்னைய முடிவை வாபஸ் பெறும் அறிவிப்பை வெளியீடுவதற்காக கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் மு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தன்னாட்சி பெற்ற தமிழ் மாநிலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் குழுக்கள் கோருவதைத்தான் தி. மு. கவும் ஆதரிக்கின்றது என்றார் கருணாநிதி. புலிகளுடன் தமக்கு தொடர்பில்லை எனினும் தனித் தமிழ் ஈழக்கோரிக்கையை ஆதரிப்பதாக ,வை. கோபாலசாமி கூறியிருப்பது தவறான செயல் இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கருணாநிதி தெரிவித்தார்.

'கட்சித்தொண்டர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்வதையும் தீக்குளிக்க முயல்வதையும் காணும்போது என் முடிவை மாற்றும் அளவுக்கு நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டது. தி. மு க வில் குழப்பம் ஏற்படுத்துவதற்கு சில சக்திகள் முயல்கின்றன. அறிஞர் அண்ணா உருவாக்கிய நான் எந்த அறைகூவலையும் சந்திக்க தயார்'. என்றும் மு. கருணாநிதி மேலும் கூறினார்.

### ருகுணு

தொன் மாவும் எடுத்து வருகிறது. இக்கப்பலில் யாழ். திட்டப்பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதனும் வருகிறார். (யோ)

### வடமகுதி

லப்படும் பொருள்களின் அளவுகளைத் தீர்மானித்தல்ஆகிய விடயங்களே ஹமில்டன் வனசிங்காவின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது. (க) (நி)

### கப்பல்

லிருந்து குறித்த நேரத்துடன் பொருள்கள் இறக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டு கப்பல்கள் நேற்று காங்கேசன் துறை நோக்கி சென்றன. (யோ)

### சிறிலங்கா

களாகக் காணப்படுகின்றன,

அப்பிரசுரங்களில், திக்கெட்டும் பகைவன் திரண்டு வந்துள்ளான். நித்திரைக்கு இது வல்ல நேரம் மகனே நெற்றித் திலகமிட்டு நின்னை அனுப்புகிறேன். வெற்றிக்கனி பறித்து வீடுதிரும்புஎன்றும்; மற்றொன்றில் யுத்தத்தின் சத்தங்கள் கதவடியில் நீங்கள் உட்கார்ந்து இருக்கின்றீர் மதவடியில், எச்சில் சுமப்பவன் மனிதனல்ல வந்த எதிரியை விடுபவன் தமிழனல்ல என்ற வாசகங்கள் இச்சுவரொட்டிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. (யோ),(க)

### 80ம் யார்

இருந்த சண்முகம் பத்மநாதன் என்கின்ற மீனவரிற்கு 50கலிபர் ரவை இடுப்பைத் துளைத்துச் சென்றது.

மறுகணம் நாங்கள் எல்லோரும் கடலில் வீழ்ந்து நீந்தி காயமடைந்தவரை கரை கொண்டு வந்து சேர்த்தோம்.

கரைக்கு வந்து சேர்ந்ததும் உயிர் பிழைத்தோம் என்று

## யூரியா வீசிறுவதற்கும் படையினர் அனுமதி தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் விவசாயிகள் இராணுவத்திருக்கு முன் வைத்தே யூரியா உரம் விசிற வேண்டும்.

விவசாயிகள் முன் கூட்டியே இராணுவத்திடம் அனுமதி பெற்றே யூரியா உரம் விசிறுவதற்குரிய திகதியை குறித்துக் கொள்ள வேண்டும் என்று கொழும்பு செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விதைக்கவும் பட்டாளத்திடம் அனுமதி பெறவேண்டும், யூரியா விசிறவும் பட்டாளத்திடம் அனுமதிபெற வேண்டும், அறுவடை செய்யவும் பட்டாளத்திடம் அனுமதி பெறவேண்டும். மொத்தத்தில் அங்கு பட்டாள ஆட்சியே நடைபெறுகிறது என்று அந்தச் செய்தித் தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## களை, கிருமி நாசினிகளின் சில்லறை விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

களை, கிருமி நாசினிகளின் சில்லறை விலை நிர்ணயம் தொடர்பாக கடந்த 5ஆம் திகதி யாழ். செயலகத்தில் இது சம்பந்தபபட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயம் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் தனியார் நிறுவனங்கள், விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்க சமாசம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றியே இவற்றின் சில்லறை விற்பனை விலை பற்றி நிர்ணயம் செய்தனர்.

இப் பொருள்கள் பலவகையானவையாகவும் பலதரத்தினை உடையவையாகவும் இருப்பதுடன் இதனை கொண்டு வருவதற்கான செலவுகளும் நிறுவனங்களிடையே வேறுபட்டு காணப்பட்டன. இதனால் இவற்றின் விலைகள் பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பொருளும் அப் பொருளை உற்பத்தி செய்த நிறுவனத்தில் பொறிக்கப்பட்ட விலையுடன் கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு ஏற்பட்ட செலவாக பின்வரும் பெறுமதியைக் கூட்டி அதன் ஆகக் கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி உற்பத்தி நிறுவனத்தில் பொறிக்கப்பட்ட விலையைவிட மேலதிகமாக அதிகரிக்கும் தொகை விபரம் வருமாறு:

களை - கிருமி நாசினி (திரவம்) 50மி. லீ போத்தல் ரூபா 6. 00, 100 மி.லீ போத்தல் ரூபா6.00,200மி.லீபோத்தல்

### இன்று

## சாம்சன் குடியிருப்பிலிருந்த 17பேருக்கு கொலரா

(யாழ்ப்பாணம்)

தீவக இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ள அரியாலை சாம்சன் அகதிமுகாமில் நேற்று கொலரா நோயினால் பாதிக்கப்பட்ட பதினேழு பேர் உட்பட மொத்தம் 25 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் மூவர் அறிவு மயங்கிய நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த கொலரா நோய் வந்ததும் சிலர் உடனடி மயக்க நிலையை அடைவதாக மேற்படி முகாம் மக்கள் தெரிவிக்கின்றனர். (88)

## தென்மாகாண முதலமைச்சர் நாளை பதவி ஏற்பு?

[கொழும்பு]

தென்மாகாண முதலமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்ய அமரசிறி தொடங்கொடவுக்கு நாளை வருமாறு ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று ஆளுநரை அவரது கொழும்புஇல்லத்தில்நீதிமன்ற தீர்ப்புடனும் தனக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறிய உறுப்பினர்களின் பட்டியலுடனும் சென்ற போது ஆளுநர் உத்தியோக பூர்வமாக இல்லத்தில் இருக்கும்போதுவந்து சந்திக்குமாறும் நாளை மாலை வருமாறும் கூறியுள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக இன்னும் தான் முழுமையாக ஆராய்வதாக தெரிவித்துள்ளார்.

## ஒற்றையாட்சியை பேண உறுதியான நடவடிக்கை

### ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஒற்றையாட்சியை பேண கூடிய விரைவில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்என ஜனாதிபதி விஜேதுங்க நேற்று தெரிவித்தார் இதற்கான வேலைத் திட்டமும் நிகழ்ச்சிகளும் வகுக்கப் பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தெற்கில் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் இந்த வேலைத் திட்டத்திற்கு அரசிற்கு மக்கள் கூடுதல் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். விரைவில் வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படுமென ஜனாதிபதி விஜேதுங்க மேலும்தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 09-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11137

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-5046, 26-3582, 24-0576, 26 4726, 28-6020
41-5015, 24,9856, 41 9111, 41-5605, 41-9659
26-4450, 26 6796, 24 4390, 27-2084, 24-0528
26-2291, 27-6762, 41 8432, 22-3887.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:


26-4393, 27-9771, 26-4281, 41 8155, 26 5244
24 6941, 22 3641, 26 4691, 24-0336, 26-4648
42-1722, 26 2125, 22 3038.

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

KILLER INSTINCT

நெல்லியான் வீதி, மருமகன், பேரப்பிள்ளைகள்,
சுளிபுரம் உறவினர்கள், நண்பர்கள்.
10-10-1993 (சி-7577)

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



## T.M.யோசேப்(செல்லத்துரை)

பிறப்பு: 28-8-1925 இறப்பு: 10-10-1992

ஆண்டொன்று ஆயினும்
ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
ஆண்டவனடி சேர்ந்தனையோ —எம்
அன்பின் குலவிளக்கே.

மண வாழ்வில் நாற்பது ஆண்டு ஒருயிராய் ஒன்றித்து
மலர் போல் எம் வாழ்வை தினமும் மலர்ந்திடச் செய்தாயே
குடும்பத்தின் தலைவனாய் ஒளி கொடுத்து-எம்
குலம் காத்து நின்றாயே அப்பனே!
ஒன்பது செல்வங்களை உன்மடியில் தவழ விட்டு-நீ
ஒய்வில்லாது உழைத்து இப்போ! ஒடி
ஒளித்து சென்ற துயரை கண்ணீரால் நிரப்பினாயோ
உனைப் பிரிந்து எப்படி ஒராண்டு கடத்தினோமையா
உள்ளத்தில் உன் நினைவை சுமந்து தினம்
உருகி நின்று தவிக்கும் அவலம் பாராயோ!
செல்லத்துரை என்னும் பெயர் பெற்று-நீ
சென்ற இடமெல்லாம் உன் புகழாலே
செல்வந்தனாய்த் திகழ்ந்து வாழ்ந்த காலத்தை மறப்போமா!
அன்பையும் பாசத்தையும் பண்பையும் அளித்து
அறிவுரைகள் பல கூறி இல்லையென்ற சொல் தெரியாது
அடைக்கலம் தேடி வந்தவரை இன்முகத்துடன்
அரவணைத்து நீ வாழும் காலம் செய்ய
அளப்பரிய சேவைகளை மறக்கச் சொல்கிறாயோ!
ஐயா! உன்னை எப்படி மறப்போம்!
ஐயா! என நாம் வாயார அழைக்கும்
அந்த பொன்னான நாளை எண்ணி
அழுகின்றோம். விண்ணக வாழ்வில் உன்
ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நாளை 11-10-1993 காலை 7-30 மணிக்கு அச்சுவேலி புனித வளனார் தேவாலயத்தில் இவரது ஆன்மா சாந்தியடைய இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்:-
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(6256) சகோதர, சகோதரிகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

...கிறேன். வெற்றிக்கனி பறித்து வீடுதிரும்புஎன்றும்; மற்றொன்றில் யுத்தத்தின் சத்தங்கள் கதவடியில் நீங்கள் உட்கார்ந்து இருக்கின்றீர் மதவடியில், எச்சில் சுமப்பவன் மனிதனல்ல வந்த எதிரியை விடுபவன் தமிழனல்ல என்ற வாசகங்கள் இச்சுவரொட்டிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. (யோ),(க)

### 809 யார்

இருந்த சண்முகம் பத்மநாதன் என்கின்ற மீனவரிற்கு 50கலிபர் ரவை இடுப்பைத் துளைத்துச் சென்றது.

மறுகணம் நாங்கள் எல்லோரும் கடலில் வீழ்ந்து நீந்தி காயமடைந்தவரை கரை கொண்டு வந்து சேர்த்தோம்.

கரைக்கு வந்து சேர்ந்ததும் உயிர் பிழைத்தோம் என்று எண்ணியவாறு காயமடைந்தவரைத் தூக்க முயன்ற வேளை காரைநகர் முகாமில் இருந்து எம்மை நோக்கி ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அடுத்தடுத்து சுமார் நான்கு ஷெல்கள் எம்மை அண்மித்து வீழ்ந்து வெடித்தன. எனினும் பதுங்கு குழி ஒன்று அவ்விடத்தில் இருந்தமையால் உயிர்தப்பித்துக்கொண்டோம்.

ஷெல்தாக்குதல் சற்றுத் தணிய காயமடைந்தவரை ஏற்றிக்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தோம். அவர் அங்கு மரணமானார் என தெரிவித்தார்.

மேலும் தப்பிவந்த க. கோணேஸ்வரன் என்ற மீனவரை நமது நிருபர் சந்தித்தபோது தங்களுடைய கட்டுமரம், வலை மேலும் பல மீன்பிடி உபகரணங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என மனவருத்தத்துடன் தெரிவித்தார்.

(41) (பா)

...சில்லறை விலை நிர்ணயம் தொடர்பாக கடந்த 5ஆம் திகதி யாழ். செயலகத்தில் இது சம்பந்தபபட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயம் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் தனியார் நிறுவனங்கள், விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்க சமாசம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றியே இவற்றின் சில்லறை விற்பனை விலை பற்றி நிர்ணயம் செய்தனர்.

இப் பொருள்கள் பலவகையானவையாகவும் பலதரத்தினை உடையவையாகவும் ...வுகளும் நிறுவனங்களிடையே வேறுபட்டு காணப்பட்டன. இதனால் இவற்றின் விலைகள் பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளன..

ஒவ்வொரு பொருளும் அப்பொருளை உற்பத்தி செய்த நிறுவனத்தில் பொறிக்கப்பட்ட விலையுடன் கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு ஏற்பட்ட செலவாக பின்வரும் பெறுமதியைக் கூட்டி அதன் ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி உற்பத்தி நிறுவனத்தில் பொறிக்கப்பட்ட விலையைவிட மேலதிகமாக அதிகரிக்கும் தொகை விபரம் வருமாறு:

களை - கிருமி நாசினி (திரவம்) 50மி. லீ போத்தல் ரூபா 6. 00, 100 மி.லீ போத்தல் ரூபா6.00,200மி.லீபோத்தல் ரூபா 8. 00, 400மி.லீ போத்தல் ரூபா 13. 50, 1000 மி.லீ கான்-போத்தல் ரூபா 20.00, 1500 மி. லீகான் - போத்தல் ரூபா 30.00

களை-கிருமி நாசினி (பவுடர்): 100 கிராம் பைக்கற் ரூபா3.50,200கிராம்பைக்கற் ரூபா 7. 00,500 கிராம் பைக்கற் ரூபா 11. 50, 500 கிராம் பைக்கற் காபோ பியூடோன் ரூபா 4. 50, 1000 கிராம் பைக்கற் காபோ பியூடோன் ரூபா 15. 00, 2000 கிராம் பைக்கற் காபோ பியூடோன் ரூபா 19. 50 (சி)

### இன்று

யில் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்படும்.

அதனையடுத்து கோப்பாய் கந்தசுவாமி கோவில் முன்றலில் வீரவணக்க கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

2-ம் லெப். மாலதியின் நினைவு நாளை முன்னிட்டு ஓமந்தையில் மூன்று நாள்கண்காட்சியும் நடைபெற்று வருகிறது.

### தி. மு. க

கொல்ல விடுதலைப் புலிகள் சதிசெய்துள்ளதாக அறிவித்த கருணாநிதி பின்னர் தாம் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாகவும் அறிவித்தார்.

இரு அறிவிப்புகளும் எதிர்பார்த்த விளைவை தராத நிலையில் மீண்டும் இப்போது தாம் அரசியலில் நுழைவதாக கருணாநிதி அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

### அரங்கம் வெளியீட்டு விழா

உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் வெளியிடும் அரங்கம் சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளியீட்டுவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது ஆண்டில் காலடிஎடுத்து வைக்கும்

# இராசன் அச்சகம்

அச்சுக்கலையில் ஓர் புரட்சி!

- பல வர்ணப் பதிப்புக்களின் உலா!
- எழில் மிஞ்சும் எளிமையான பதிப்புக்கள்!!
- எண்ணியபடி எழுத்துருவாக்கம்!!!
- காலத்தால் அழியாத கலை நுணுக்கம்!!!!

இவை யாவும் ஒன்றிணைந்ததுதான்

# இராசன் அச்சகம்

144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம். [6253]

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11137

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-5046, 26-3582, 24-0576, 26-4726, 28-6020
41-5015, 24,9856, 41 9111, 41-5605, 41-9659
26-4450, 26 6796, 24 4390, 27-2084, 24-0528
26-2291, 27-6762, 41 8432, 22-3887.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-4393, 27-9771, 26-4281, 41 8155, 26-5244
24 6941, 22 3641, 26 4691, 24-0336, 26-4648
42-1722, 26 2125, 22-3038.

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

## KILLER INSTINCT

(கொலை வெறி)
(முழுநீளத்தாக்குதல் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30 மணி,
மாலை 4-00 மணி, 6-00மணி
(இ-7352)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

### திரு. சிவராசா விசாகமூர்த்தி

[யாழ். செயலகம் கச்சேரி]

மணமாகி ஓராண்டு மடியவில்லை! புது
மலர்கூடப் பிஞ்சொன்றை மலரவில்லை
பிணமாக உனைக்காணும் கொடுமை செய்தார்-நீ
பிரிந்தபின்னும் வாழ்ந்திடுமோ அன்றிற்பேடு!
குணவானே! குமுதமலர்க் கொழுந்தன் நீயே-இதயம்
குமுறுகின்ற குரல் கேட்பாய் விசாகமூர்த்தி!
கனவான உன் நினைவைக் காலந்தோறும் எங்கள்
கலங்குகின்ற நெஞ்சமதில் காப்போமையா.

சகோதரியின் துயரத்தில் பங்குகொள்ளும் மாணவர்கள்
முதலாம் வருடம் - இந்துசமயம் A
ஆசிரியர் கலாசாலை,
10. 10. 1993 [6254] கோப்பாய்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிதம்பரப்பிள்ளை

கொட்டைக்காடு மாதகலைச் சேர்ந்தவரும் மட்டுவில் தெற்கில் வசித்தவருமான கந்தையா சிதம்பரப்பிள்ளை 9 - 10 - 1993 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் கணவரும் கந்தர் சுந்தரத்தின் சகோதரருமாவார். இறுதிக் கிரியைகள் 9-10-1993 இல் நடைபெற்றன. இவ்அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

க. முத்துலிங்கம்
மட்டுவில் தெற்கு. (மருமகன்)
(6253)